# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு

மின்வாரிய வளாகம்

144, அண்ணாசாலை சென்னை.

*********

பெறுநர்

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள்,

அய்யா/அம்மையீர்,

வணக்கம்,

பொருள்: மின்சார சட்ட திருத்த மசோதா 2021 நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வது – தடுக்க கோருதல் தொடர்பாக.

******

இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் ஜீலை மாதம் 19ம் தேதி முதல் துவங்க உள்ளதாக அறிகிறோம்.

இந்த கூட்டத் தொடரில் மின்சாரச் சட்ட திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு அமலாக்கப்பட்டால் ஏற்பட உள்ள பின் விளைவுகளை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

அரசியல் அமைப்பு சட்டத்தில் மின்சாரம் பொது பட்டியலில் (Entry 58) உள்ளது.

அரசியலமைப்பு அட்டவணையின் கீழ் 246 பிரிவு வழங்கியுள்ள மாநிலங்கள் சட்டமியற்றும் அதிகாரத்தை மீறும் செயலாகும்.

தமிழகத்தில் 3.19 கோடி மின் நுகர்வோர்களும், 82000 மின்வாரிய பணியாளர்களும் உள்ளனர். நாடு முழுவதும் 10 லட்சத்திற்கு மேற்பட்ட மின்வாரிய பணியாளர்கள் உள்ளனர். இவர்களின் பணிப்பாதுகாப்பும், சமூக பாதுகாப்பும் கேள்விக்குறியாகும்.

மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் உரிமை மாநிலங்களிடமிருந்து பறிக்கப்படும்.

விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும், நெசவுத் தொழிலுக்கும் வழங்கும் இலவச மின்சாரம் ரத்து செய்யப்படும்.

மின்சாரம் சந்தை பொருளாக மாறும். ஏழை, எளிய மக்களுக்கு மின்சாரம் எட்டாக்கனியாக மாறும்.

குறைந்த விலையில் மின்சாரம் வீட்டு உபயோகத்திற்கு வழங்குவதற்கு மூலாதாரமாக இருக்க கூடிய இடை மானியம் (Cross subsidy) நிறுத்தப்படும்

மின்வாரியம் பொதுத்துறையாக நீடிக்கவும், மாநில உரிமைகள் பறிபோகாமல் இருக்கவும், மின்சார சட்ட திருத்த மசோதா 2021ஐ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திடும் பொழுது தங்களது எதிர்ப்பினை தெரிவிக்க கேட்டுக்கொள்வதோடு மாநில உரிமைகள் பாதுகாத்திட வேண்டும் என மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

தமிழ்நாடு மின்கழக கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் (LPF)

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (CITU)

மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம்

தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிற்சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (NLO)

தொழிலாளர், பொறியாளர் ஐக்கிய சங்கம் (HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

மின்வாரிய கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய பொறியாளர் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்